gistered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 39—No. 2

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 39 | விசுவாவசு மாசி பிப்ரவரி 1966 | இதழ்

உள்ளுறை பக்கம்

சைவம் ...	21
பட்டினத்தார் துறவு ...	24
வரவேற்புரை ...	28
ஆசியுரை ...	31
தீர்மானங்கள் ...	31
மதிப்புரை ...	33
சைவப்புலவர் தேர்வு ...	35
சமாஜ வைரவிழா – மங்கையர் மாநாட்டுத் தலைமையுரை —அனுபந்	

பத்திராசிரியர்: மு. அருணாசலம், எம். ஏ.,
உதவிப் பத்திராசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.
ஆண்டுச் சந்தா ரூபா. 3 தனிப்பிரதி அணா

சோமவார நிகழ்ச்சிகள் சிறப்பாய் நிகழ்ந்தன. 22-11-65, 29—11—65, 6—12—65, 13—12—65 ஆம் நாட்களில் திருவாளர்கள் சே. த. இராமலிங்கம் பிள்ளை, பி.ஏ. எல்.டி., காமாட்சிதாசர் ஆர். சோமசுந்தர அய்யர், வித்துவான் அம்பை, இரா. சங்கரனார், திரு பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார் எம்.ஏ., ஆகியோர் முறையே சீர்பாத வகுப்பு, திருப்புகழ் பஜனை, தாயுமானார் திறன், தொண்டர்க்குத் தொண்டர் என்பன பற்றி விரிவுரைகள் நிகழ்த்தினர்.

நிகழும் விசுவாவசு ஆண்டு மார்கழி (16—12—65) முதல் சங்ககிரி அருள்நெறிக் கழகத்தாரால் சங்ககிரி ஸ்ரீ சௌந்திரவல்லி சோமேஸ்வரப் பெருமான் திருவாலயத்தில் விடியற்காலை பிரதி தினமும் 4-30 மணி முதல் 6-30 மணி வரை வித்வான் தி. செ. கந்தசாமி பிள்ளை அவர்களால் திருவெம்பாவையும், திருப்பள்ளியெழுச்சியும் பாராயணம் செய்து பஞ்ச புராணம் ஓதியும் வழிபாடு நடைபெற்று வந்தது.

புரசைத் திருநெறிக் கழகத்தின் சார்பில் திருவெம்பாவைச் சொற்பொழிவுகள் சித்தாந்தம் துணையாசிரியர் வித்துவான் அம்பை சங்கரனாரால் 16-12-65, 23-12-65, 6—1—66, 7—1—66, 13—1—66 தேதிகளில் நிகழ்த்தப் பெற்றன. 14—1—66ல் பாராட்டுவிழா நிகழ்ந்தது.

மேற் குறித்த கழகத்தின் 58-ஆம் திங்கள் வழிபாடு 18—12—65, 19—12—65-ஆம் நாட்களில் சோழலிங்கபுரத்திலும் காஞ்சி கைலாசநாதர் கோவிலிலும் நிகழ்ந்தது.

59-ஆம் திங்கள் வழிபாட்டு விழா 16—1—66ல் தேனாம்பேட்டை பாலசுப்பிரமணியர் ஆலயத்தில் நிகழ்ந்தது

கோவை மாவட்டம் புன்செய்ப் புளியம்பட்டியில் திருமுருகன் கோவிலும் மறைமலையடிகள் மன்றத்திலும் 25—12—65 முதல் 29—12—65 முடிய திருவெம்பாவை விளக்கவுரையும் உண்மைவிளக்க சிவஞான போத வகுப்பும் முறையே காலையும்இரவும் நிகழ்ந்தன. திரு. மறைதிருநாவுக்கரசு அவர்கள் இவ்விரு நிகழ்ச்சிகளையும் செவ்வனே ஆற்றினார். 28—12—65 அன்று திருப்பாவை திருவெம்பாவை விழாவும் மறை திருநாவுக்கரசு அவர்கள் தலைமையிலேயே சிறப்புற நிகழ்ந்தது. பல அன்பர்கள் சொற்பெருக்காற்றினர்.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 39 | விசுவாவசு மாசி 1966 பிப்ரவரி | இதழ் 2

சைவம்

(ஆசிரியர்)

சைவம் என்பது யாது? இதைத் திருப்பித் திருப்பிச் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. 'சைவம் சிவனுடன் சம்பந்தமாவது' என்று திருமூலர் கூறுகிறார். எல்லாச் சமயங்களுக்கும் அடிப்படை ஒன்று உண்டு. சைவத்துக்கும் ஆணி வேரான ஒரு கருத்து உண்டு. அதுவே, எந்த உயிருக்கும் அன்பு செய்தல் – துன்பம் செய்யாமை; உயிர்கள் யாவும் ஆண்டவன் படைப்பு. புல் பூண்டு புழு பறவை மிருகம் மனிதன் யாவும் அவன் படைப்பு, யாவும் அவன் குழந்தைகள். எவ்வுயிர்க்கும் அன்பு செய்தல் என்பது, காலக்கிரமத்தில், துன்பம் செய்யாமை எனக் குறைந்து, பின்னர் கொல்லாமை–புலால் மறுத்தல் என்று பின்னும் குறைந்து போயிருக்கக் காண்கிறோம். எனவே இதுவே சைவத்துக்குக் குறைந்த அளவான அடிப்படை. இதை விட்டால் பின் சைவம் இல்லை. 'அன்பே சிவம்' என்பது திருமூலர் வாக்கு.

கடவுள் படைப்பில் மனிதன் வளர்ச்சி பெற்ற உயிர் பிராணி வளர்ச்சி பெறாத உயிர்; முறையே மூத்த பிள்ளையும் இளைய பிள்ளையும். மூத்த பிள்ளை இளைய பிள்ளையை வெட்டித் தின்ன, கடவுளாகிய தந்தை சம்மதிப்பாரா?

மக்கள் தங்களுக்குள் சாதி சமயம் குலம் கோத்திரம் என்று சண்டையிட்டுக் கொண்டிருந்ததைக் கண்ட ஒரு கோழி, அயல் நின்ற கோழியைப் பார்த்துச் சொல்லிற்றும்: "புலையன் மலத்திலும் அகப்படுவனவற்றைச் சீத்து உண்ணும் நம்மைக் கொன்று தின்னும் இம் மனிதப் பிறவிகளுக்குக், குலமென்ன கோத்திரமென்ன வந்தது?

புலையன்தன் மலமுண்ணும்
எமையுண்ணும் புலையர்க்குக்
குலமென்ன நலமென்ன
குக்கூ என்றன கோழி!"

புலால் உண்பதைப் பழிக்க இதைவிடப் பழிப்பான சொல் சொல்ல முடியாது.

திருக்குறள் ஆசிரியர் இதுபற்றி இரண்டு அதிகாரங்கள் அமைத்திருப்பதை நாம் மனத்தில் கொள்ள வேண்டும். புலால் மறுத்தல் என்ற அதிகாரத்தில் தாம் கூறியுள்ள கருத்துக்கள் போதவில்லை என்று அவர் மனத்தில் பட்டு, மீண்டும் கொல்லாமை என்ற ஓர் அதிகாரம் அமைத்திருக்கிறார். அவர் கேட்கின்ற கேள்விகள் மிகவும் ஆழமாய் நெஞ்சில் தைப்பன. தன் உடம்பைப் பெருக்கும் பொருட்டு வேறோர் உயிரின் உடம்பை உண்பவன் எவ்வாறு அருள் உடையவன் ஆவான்?

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்? 251

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும் 260

அறவினை யாதெனின் கொல்லாமை 321

ஒன்றாக நல்லது கொல்லாமை 323

என்ற வரிகளைக் காண்க.

ஒருவன், "நான் விமானம் ஓட்டுவதில் மிகவும் வல்லவன், துப்பாக்கிச் சுடுவதில் வல்லவன், விமானப்

படையில் சேர்த்து என்னைச் சீனப் போருக்கு அனுப்புங்கள்" என்று கேட்டால், சேனாதிபதியின் கருத்துப்படி இத்தகுதி போதாது. "உனக்கு இந்தியா விடம் பக்தி உண்டா?" என்பது முதல் கேள்வி. "இல்லை" என்ற பதில் வந்தால், அவன் இராணுவத்தில் விலக்கப்படுவான். அதுபோல, சிவனடியான் என்ற சொல்லுக்கு முதற் பொருள் சைவன், புலால் மறுப்பவன் என்ற பொருளாகும்; ஆகவே புலால் உண்பவன் இங்கு விலக்கப்படுகிறான் என்பது அடிப்படையான முதற் பொருளாகும்.

கண்ணப்பர் இறைவனுக்குத் தாம் வேட்டையாடிய பிராணிகளின் இறைச்சியை அமுதாக அளித்தார் என்ற செய்தி சொல்லப்பட்டது. கண்ணப்பர் "பண்டை நல் தவத்தால் தோன்றிப் பரமனைப் பத்தி பண்ணும்" சாமு சித்தர்களில் ஒருவர். அவருடைய அன்பு இறைவனையே உருக்கி அவர், செயலை, "நில்லு கண்ணப்ப" என்று சொல்லி நிறுத்தும்படி செய்தது. கண்ணப்பர் உதாரணம் இன்றைய உலகுக்குப் பொருந்துவதன்று. கண்ணப்பரை ஒப்பதோர் அன்பு தமக்கு இல்லையே என்று மாணிக்க வாசகர் இரங்குகிறார். கண்ணப்பர் போல அன்பு கொண்டு யாரேனும் இன்று கண் இடந்து அப்பவல்லார் களா? மாணிக்கவாசகருடைய அன்பு யாருக்கும் வராது என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். கண்ணப் பர் உதாரணம் எப்படிப் பொருந்தும்!

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சைவத்துக்கு விரிவான பொருள் கொடுத்த பெருமையுடையவர். தமிழ்நாட்டுக்கு அப்பாலும், அவர் காலத்துக்கு முன்னும் பின்னும் வாழ்ந்த அடியவர்கள் அனைவரையும் "அப்பாலும் அடி சார்ந்தார்" என்று பணிகிறார். எங்கிருந்து சிவனை வழிபடுவது என்றாலும், சிவபெருமான் என்ற பெயரையே சொல்லி வழிபடுவதாகாது. இலங்குயிர் அனைத்தினையும் ஈசன் கோயில் என்று யார் காண்கின்றாரோ அவரே இந்த அப்பாலும் அடி சார்ந்தார்; அவரே கொல்லாமை நோன்பு கடைப்பிடிப்பவர்; அவரே சைவர்.

மகாத்மா காந்தி இந்திய நாட்டுக்கு மட்டும் அல்ல, உலகம் முழுமைக்குமே ஓர் அன்பு நெறியை வகுத்துக் கொடுத்தார். அந்த நெறி கடவுள் என்ற மந்திரம்; அதில் ஒருபக்கம் அன்பு அல்லது அஹிம்சை, மறுபக்கம் சத்தியம் என்று நாம் எடுத்துச் சொல்லி மிகவும் பெருமைப் படுகிறோம். இந்த நிலையில் புலால் உண்ணுவதும் சைவம் ஆகும் என்று யாரேனும் கூறினால், அது இன்றைய சமயதர்மம் மட்டும் அல்ல, தேச தர்மத்திற்கே விரோதமான கருத்தாகும். "சத்தியத்தையும் அஹிம்சையையும் கைவிட்டால்தான் சுதந்திரம் வருமென்றால், அந்தச் சுதந்திரம் எனக்கு வேண்டாம்" என்ற வீறு உடையவர் மகாத்மாகாந்தி. சைவமும் அத்தகையதே.

அன்பு நெறி சைவம் என்ற ஒரு தீபம் உலகெங்கும் ஒளிவிட்டுக் கொண்டிருந்தது. கால வேகத்தில் அவ்வொளி மங்கிப் பல நாடுகளில் அணைந்து விட்டது. தமிழ் நாட்டில் மட்டும் அது பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. அதை அணையாமல் காத்துப் பின்வரும் சந்ததியாரிடம் ஒப்புவிக்கும் பொறுப்பு நம்முடையது. சுழல் காற்று அடிக்கிறதே என்று நாமும் கைவிட்டு ஓட முடியாது. நம்முடைய பொறுப்பு மிகவும் பெரிது.

பட்டினத்தார் துறவு

(R. பஞ்சாநதம் பிள்ளை; தமிழ்ப் புலவர், திருச்சி)

காவிரிப்பூம் பட்டினத்தில் தோன்றி வாழ்ந்து துறவு அடைந்தவரே பட்டினத்தார் என்னும் திருவெண்காடர் ஆவர். துறவு அடைபவர் மூன்று வகையாகக் கூறப்படுவர். அவர்கள் பொருள் இல்லாமல் துறந்தவர், குடும்பத் தொல்லையால் துறந்தவர், எல்லாம் இருந்து துறந்தவர் ஆவார்கள். இவர்களில் எல்லா வகைச் செல்வங்களும் இருந்து துறந்தவர் பட்டினத்தார் ஆவர். இதனால் இவரை முற்றும் துறந்த பட்டினத்தடிகள் என்று புகழ்ந்து கூறுவர்.

பட்டினத்தார் துறவு அடைந்தது குறித்துப் பல வரலாறுகள் வழங்குகின்றன. இவர் மிகுந்த செல்வந்தராய் வாழும்போது இவர் உலகப்பற்றில் – பாசபந்தத்தில் அழுந்திவிடாமல் உயர் நெறியில் – சன்மார்க்கத்தில் செலுத்தும் பொருட்டு இறைவனே திருக்குமரனாக வந்து மருதவாணன் என்னும் பெயருடன் வாழ்ந்து வந்தான். மருதவாணன் மகிமையால் பட்டினத்தாருக்குச் செல்வம் பொங்கி வந்தது. சில ஆண்டுகளுக்குப் பின் மருதவாணன் தன் தாயாரிடத்தில் ஒரு சிறு பெட்டகத்தைக் கொடுத்து விட்டு மறைந்து சென்றான். பெட்டகத்தில் காதில்லாத ஊசியும், ஓர் ஓலைத்துண்டும் அதில் 'காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே' என்ற வரியும் காணப் பட்டன. இவைகளைக் கண்டதும் பட்டினத்தார் மனப் பக்குவம் பெற்றவராதலால் உடனே துறவை மேற்கொண் டார். இது ஒரு வரலாறு.

இனிப் பட்டினத்தார் புராணம் என்னும் நூலில் இவர் துறவு பெற்றதைக் கூறும் கருத்துக்களைப் பார்ப்போம். திருவிடைமருதூர்த் தெய்வநாயகனை மருதவாணன் 'காதில்லாத ஊசியையும், ஒரு நூல் துண்டையும் பட்டினுற் சுற்றி ஒரு பெட்டியிலிட்டு முத்திரையிட்டுத் தன் தாயார் சிவகலையிடம் தந்து தந்தையிடம் கொடுக்கும்படி கூறி மறைந்துவிட்டான். இவைகளைத் தெரிவிக்கும்

1. திருவிடை மருதூர்த் தெய்வ நாயகன்
   ஒருபுடைக் காதறை ஊசி வாசியால்
   பிரிவுடைச் சரட்டொடு பேணி மாணுறப்
   பரிவுடைப் பட்டினுற் பயிலச் சூழ்ந்தரோ.

2. ஏற்றபூம் பெட்டியி னிட்டுக் கட்டுறத்
   தேற்றமா முத்திரைச் சின்னஞ் சேர்த்தினன்
   கோற்றொடி அன்னைகைக் கொடுத்துன் மைந்தனுக்கு
   ஆற்றவீ தளித்தியென் றகன்று போயினன்.

பட்டினத்தார் பெட்டியைத் திறந்து பார்த்தார். காதில் லாத ஊசியும், ஒரு நூல் துண்டும் இருந்தன. பார்த்த வுடன் துறவுஞானம் ஏற்பட்டது. பட்டினத்தார் மனப் பக்குவம் பெற்றவர். இறைவன் திருவருளும் கூடிற்று.

மனப்பக்குவத்தில் மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என்னும் படிநிலைகள் உண்டு. வாழைத் தண்டில் நெருப்புப் பிடிப்பது போன்றது மந்ததரம். பச்சை விறகில் நெருப்புப் பிடிப்பது போன்றது மந்தம். உலர்ந்த விறகில் தீப்பிடிப்பது போன்றது தீவிரம். கரியில் தீப் பிடிப்பது போன்றது தீவிரதரம். இவைகளில் கரியில் விரைவில் தீப்பிடிப்பது போன்ற மனப்பக்குவத்தை உடைய பட்டினத்தார் காதில்லாத ஊசியையும், நூல் துண்டையும் பார்த்தவுடன் துறவை மேற்கொள்ளலானார். காதில்லாத ஊசியும், நூலும் சில சாஸ்திர உண்மைகளை - நீதிகளை உணர்த்துகின்றன. காதுள்ள ஊசியில் நூல் ஏறும். காதில்லாத ஊசியில் நுழையாது. அதுபோல நம் காதுகளில் சாஸ்திரமாகிய நூல் ஏறவேண்டும். அதாவது சான்றோர் அருளிய உயர்நூல் கருத்துக்களைக் கேட்கவேண்டும். ஞானம் அடைவதற்குக் கற்றலைவிடக் கேள்வியே சிறந்தது. 'கற்றிலனாயினும் கேட்க' என்றும் 'கற்றலின் கேட்டலே நன்று' என்றும் ஆன்றோர் கூறுவர். நன்றாகக் கேட்டறிய வேண்டும் என்பதற்காகவே இயற்கையில் ஐந்து இந்திரியங்களில் காது முற்றும் திறந்தே உள்ளது. மேலும் காதுக்கும் நூலுக்கும் தொடர்பு உண்டு. (மாந்தர் ஒரு வேலையுமில்லாமல் சும்மா இருக்கும் வேளையில் ஒரு துண்டின் நூலை முறுக்கிக் காதில் விட்டுக் குடைவர்.) காதுக்கும் நூலுக்கும் உள்ள தொடர்பைப் புராண ஆசிரியர் பின்வருமாறு காட்டுகிறார்.

'காதில்நூல் போதல்நம் காதில் கல்விநூல்
போதலைக் குறிப்பினாற் புகன்ற பொற்புமாம்'

இனி நூல்துண்டு - பாசத்துண்டு, ஆணவம் - கன்மம் - மாயை என்னும் பாசங்களை நினைப்பூட்டி அவைகளை முற்றிலும் விடவேண்டும் என்பதையும் குறிக்கும் பதி பசு-பாசம் என்னும் மூன்றில் பசுவாகிய உயிர் பாசங்களினின்றும் நீங்கிப் பதியாகிய இறைவனை அன்பினால் அடைய வேண்டும் என்பது விதி. இதை

'சேதமிப் பாசம்நம் பாசச் சேதமாம்
மேதகும் உலகெலாம் விடுங்கு றிப்புமாம்'

என்கிறார். இக்கருத்துக்களைக் கொண்ட முழுப்பாடலைப் பார்ப்போம்.

'காதில்நூல் போதல் நம்காதிற் கல்விநூல்
போதலைக் குறிப்பினிற் புகன்ற பொற்புமாம்
மேதகும் உலகெலாம் விடுங்கு றிப்புமாம்
சேதமிப் பாசம்நம் பாசச் சேதமாம்'
— (பட்டினத்தார் புராணம்)

மேலும் சிவானுபவம் பெற்ற ஞானிகளுக்குக் கல்வியறிவும், கேள்வியறிவும் தேவையில்லை. அவர்களுக்கு நூலறிவும் வேண்டியதில்லை. 'நூலும் வேண்டுமோ நுண்ணறிவோர்க்கே' என்று அப்பர் கூறுகிறார். ஒரு கலையும் கல்லாத கண்ணப்பரைக் கலை மலிந்த சீர் நம்பி என்று அழைக்கிறார் சுந்தரர். எனவே அதிதீவிர பக்குவம் பெற்ற பட்டினத்தார் காதற்ற ஊசியையும் நூல் துண்டையும் கண்டவுடன் மனத்துறவு பூண்டார். பொதுவாக வாழ்க்கையில் இல்லறம் துறவறம் இரண்டும் அமைய வேண்டும். துறவென்பது எல்லாவற்றையும் விட்டுக் காட்டுக்குச் செல்வதன்று. உலக காரியங்களில் மிகுதியாக ஈடுபட்டிருந்தாலும், தாமரை இலையின் நீர் போல் மனம் பற்றற்று நிற்றல் வேண்டும். வீட்டிலிருந்தே துறவு நிலையை அடையலாம். தாயுமானவர் இல்லறமிருந்தே இதயம் அடக்கிய வல்லவராவர். பட்டினத்தார் போல ஆரும் துறத்தல் அரிது என்பர். காதற்ற ஊசியைப் போலவே உடலின் தன்மையும் உள்ளது என்பதை 'காதற்றுப் போனமுறி கட்டிவைத்தால் ஆவதுண்டோ தீதற்ற காயமும் அச்செய்கையே' என்று தாயுமானவர் கூறுகிறார். காதுள்ள ஊசி பயன்படுவது போல, உடல் இருக்கும்போதே — காற்றுள்ளபோதே — இறைவழிபாடுகளை — நற்செயல்களைச் செய்ய வேண்டும். அங்ஙனம் செய்யாவிடில் காதற்ற ஊசிபோல் பயனில்லாமல் போய்விடும். எனவே பட்டினத்தாரின் வாழ்வு உலகினர்க்கு நல்ல பாடம் கற்பிக்கிறது. இவரிடம் பத்திரகிரியார் என்ற அரசர் ஞானோபதேசம் பெற்றுத் துறவடைந்தார். பட்டினத்தார் பாடிய நூல்கள், சைவத்

திருமுறைகளில் பதினோராந் திருமுறையிற் சேர்க்கப் பட்டுள்ளன. அவைகளில் தம்முடைய அனுபவங்களைச் செம்மையாகக் காட்டுகிறார். நாமும் அவைகளைப் பயின்று நலமுறுவோமாக.

ஓட்டுடன் பற்றின்றி உலகைத் துறந்த செல்வப்
பட்டினத்தார் பத்ரகிரி பண்புணர்வ தெந்நாளோ.

பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல்
ஆருந் துறக்கை அரிதரிது —தாயுமானவர்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

வரவேற்புரை

அருள்புலிசை ஞானியார் அடிகள்முனர்,
மறைமலைநல் அடிக ளார்தாம்,
தெருள்பெருகு சீர்ச்சைவ சித்தாந்த
மகாசமாஜம், சிறக்கக் கண்டார்!
இருள்கடிந்து தமிழ்சிவம்என் றிரண் டினையும்
மிகப்பரப்பி இனிதே போற்றிப்
பொருள்மலிசீர்ப் பெரும்பணிகள் புரிந்து,அதுதான்
வைரவிழாப் பொருந்தி ஓங்கும்! 1

படியில் நீடும் பத்திமுதல், அன்பு நீரிற் பணைத்தோங்கக்,
கடிய வெய்ய அறியாமைக் களைகள் நீங்கக், கதிர்அறிவு
தடையின் றெங்கும் மிகத்தழைப்பத், தமிழ்நல் உழவர்
பயன்கொள்ள
வடிவிற் சமாஜப் பயிர்வளர்ந்து, வைர விழாவும்
வயங்கியதே! 2

நல்ல சைவ சித்தாந்த சமாஜம் எனும்நற் கற்பகம்தான்,
பல்ல துறையில் வேர்கொண்டு, பாங்கின் மலேயா
இலங்கைமுதற்
சொல்லும் தேசத்தும் நிழல்பரப்பித்,
தொண்டாம் மலர்கள் பலபூத்துத்,
தில்லைத் தலத்தில் வைரவிழாச் சிறந்த கனியும்
பழுத்ததுவே. 3

இவ்வரிய வைரவிழா எழிற்றில்லைப் பெருந்தலத்தில்
இனிதே யாகச்
செவ்வியநன் முறைநிகழத், திருமுருக க்ருபானந்த
வாரிச் செம்மால்!
எவ்வெவரும் உளம்மகிழ்ந்தே இன்பமுறத் தலைமைநிலை
ஏற்றனையால்!
ஐய! நும தரும்பெருஞ்சீர், அளவில்பெரும்பணிகளெலாம்
அளத்தற் காமோ? 4

கலைநலத்தாற் சம்பந்தர், கனிந்தஅன்பில் மணிமொழியார்,
கருதும் தொண்டின்
நிலைநலத்தால் நாவரசர், நெறிவளர்ப்பிற் சுந்தரனார்,
நெஞ்சில் வீண்பற்
றிலநலத்தாற் பட்டினத்தார், இரக்கத்தால் இராமலிங்கர்
என்றி யம்பப்
பலநலத்தாற் சிறந்தொளிர்வோய்!
பண்புயர்நின் நலங்களெலாம் பகர்தற் காமோ? 5

அருமைமிகு பெருந்தகையோய்! அரியசைவ
நெறிவளர்க்கும் அறிஞர் ஏறே!
பெருமைமிகும் அருண்மொழிநற் பேரரசே!
திருப்பணிகள் பேணும் வேந்தே!
தருமநெறி தழைப்பிக்கும் சான்றோய்! நற்
சமாஜவிழாத் தலைவ! எங்கள்
திருமுருக க்ருபானந்த வாரிஎனும்
செம்மால்! நும் சிறப்பென் சொல்கேம்? 6

செம்மை மிகுநற் சமாஜத்தின் சிறந்த மாதர் மாநாட்டின்
மெய்ம்மை உயர்ந்த தலைவிஎன, மிகவும் அன்பிற்
போந்தருளி,
எம்மைப் பெரிதும் சிறப்பித்த இராதா தியாக
ராசன்எனும்
அம்மை! நின்னை மங்கையர்கட்கு அரசி எனவே
போற்றுகின்றோம்! 7

அன்பார்ந்து அறிவும் மிக்கொளிரும் அரிய எங்கள்
கலைஅன்னை!
இன்பார் தமிழ்த்தாய் எனவிளங்கும் இணையில் பண்பின்
பெருஞ்செல்வி!
முன்பால் வாழ்ந்த புனிதவதி, முதிர்ந்த தவத்தின்
திலகவதி,
என்பார் போன்றே மதித்துநினை, யாங்கள் பெரிதும்
மகிழ்கின்றோம்! 8

ஆங்கிலமும் தீந்தமிழும் அருமைமிகு வடமொழியும்
ஆய்ந்து தேர்ந்தோய்!
தேங்குபெருங் கலைக்குரிசில்! திருஞான சம்பந்தச்
செம்மால்! நீதான்
ஈங்கினிய சித்தாந்த இளைஞர்களின் மாநாட்டில்
தலைமை ஏற்ற
பாங்கு,மிகப் பொருத்தம்எனப் பாராட்டிக்
களிக்கின்றோம்! பண்பின் வாழ்க! 9

வருக! வருக! என்றுநுமை வரவேற்று, அன்பு மீக்கூரப்
பெருகும் மகிழ்ச்சி மிக்கோங்கப், பேணி உவந்தே
போற்றுகின்றோம்!
உரிய முறையில் வைரவிழா ஒளியின் நிகழச், சமாஜத்தின்
அரிய தலைவர் என அமர்ந்து,உம் அருந்தொண் டாற்றி
வாழியரோ! 10

(இயற்றியவர் : திரு. ந. ரா. முருகவேள், M.A., M.O.L.)

சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜம் 60-ஆம் ஆண்டு நிறைவு வைர விழா சிதம்பரத்தில் நிகழ்ந்தபொழுது, சைவர் மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய அருண்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களுக்கும், சைவ மங்கையர் மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய திருமதி. இராதா தியாகராசன் அவர்களுக்கும், சைவ இளைஞர் மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய திரு. பெ. திருஞானசம்பந்தம், M.A., L.T. அவர்களுக்கும் சமாஜத்தார் மனமுவந்து வழங்கியது.

ஆசியுரை

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய சிவப்பிரகாச பண்டார சந்நிதி, துறையூர் ஆதீன ஸ்ரீ குமாரதேவர் மடம் 19-ஆம் சிம்மாசனாதிபதி, விருத்தாசலம்.

இன்றைய உலகில் நிரீச்சுரவாதம் நிரம்பி வழிகின்றது. அதனைப் போக்கி சைவ சித்தாந்தச் சிறப்பினை உலகறியச் செய்யவேண்டும். அதனால் உலக மக்கள் நன்மை அடைவார்கள். தற்கால உலகில் அதனைச் செய்வதற்குச் சாதனமாயுள்ளது இதழ்களை வெளியிடுதலேயாம். அவை உலக மொழியில் அமைந்திருக்க வேண்டும். அதனை உணர்ந்த சைவ சித்தாந்த சமாஜத்தார் வைர விழாவில் அப்பணியைத் தொடங்குவது சாலச் சிறந்ததாகும். இதழ் ஆசிரியராகத் தங்களை நியமித்திருப்பது பொருத்தமாகும். தாங்கள் குருலிங்க சங்கம வழிபாட்டில் சிறந்துள்ளமை நாம் அறிந்ததேயாகும். தங்களுக்கு நமது அன்பும் ஆசியும் உரியதாகுக. இது நாள்வரை ஆதீன மடாலயங்களும் சைவ சித்தாந்த சபைகளும், சமாஜங்களும் ஆற்றிவந்த பணிகளுக்கு இவ்விதழ் உறுதுணையாக உதவி செய்யும். வைர விழாவும் ஆங்கில சைவ சித்தாந்த இதழ் வெளியீடும் சிறப்பாக நடைபெற ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

தீர்மானங்கள்

2—1—1966ல் சிதம்பரத்தில் நிகழ்ந்த பொதுக் குழுக் கூட்டத்திற்கு அனுப்பிய தீர்மானங்கள் பரிசீலிக்கப்பட்டு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

பின் வரும் முடிவுகள் ஏகமனதாக எடுக்கப் பெற்றன :—

1. தற்காலத்திற்கேற்ற வகையில் சமாஜ விதிகளைத் திருத்தியமைக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்பது.
2. மாவட்டங்களில் சமாஜக் கிளைகள் ஏற்படுத்த வேண்டுமென்பது.
3. சமாஜ நிகழ்ச்சிகளில் சைவ சித்தாந்தத் தத்துவத்திற்குச் சிறப்பிடம் தந்து அதனை வளர்க்க வழிமுறை காண வேண்டுமென்பது.

4. துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டு வழங்க வேண்டுமென்பது.
5. வானொலியில் நால்வர் நாட்கள், சந்தான ஆச்சாரியர் நாட்கள் இவைகளில் அவரவர் நூல்களுக்குச் சிறப்பிடம் கொடுத்துத் திட்டம் வகுக்குமாறு செய்தல்.
6. செயற்குழு ஆண்டுவிழாவிற்கு முன்னர் ஒரு முறை வேலை முறைகளைச் சிந்தித்து வகுக்கத் திட்டம் செய்தல்.
7. ஆண்டு விழாவில் உறுப்பினர்களுக்கு உணவு, உறைவிடம் முதலிய வசதி தர கட்டணம் வகுத்து எதிர்காலத்தில் ஆண்டுவிழா நடத்தல்.
8. கோயில், Epigraphy, Iconography, Sculpture, Architecture இன்ன பிறவற்றை வளர்க்க முற்படுதல்.
9. சைவ சித்தாந்தத்தைப் பற்றித் தெளிவான உரைநடை நூல் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுத ஏற்பாடு செய்தல்.

பின், திரு மு. அருணாசலம் அவர்கள், மூன்று ஆண்டுகள் சமாஜச் செயலாளராக நல்ல முறையில் பணியாற்றிய திரு கொ. நீ. சிங்காரவேலு முதலியார் அவர்களைப் பாராட்டிப் பேசினார்.

பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் பெற்றது :—

"இப் பொது உறுப்பினர் கூட்டம், மூன்று ஆண்டுகள் சமாஜச் செயலாளராகச் சிறந்த பணியாற்றிய திரு கொ. நீ. சிங்காரவேலு முதலியார் அவர்களைப் பாராட்டுகிறது."

பின், சமாஜத் தலைவர் அவர்கள் தம் முடிவுரையில், சென்னை ஈவினிங் பஜாரில் உள்ள சமாஜக் கட்டடத்தை மாற்றி அமைத்து, மேல் மாடிக்கட்டடம் கட்ட தற்போதுள்ள யோசனையை எடுத்துக் கூறி, இக் கட்டடம் கட்டுவதற்கான சூழ்நிலை உள்ளது எனக் காரணங்களுடன் தெரிவித்தார்.

மேலும், தாம் இயற்றிய "பூம்பாவை" என்னும் நாடகத்தை சமாஜ ஆதரவில் நடத்தலாமென்றார். யாவரும் இவ்விரு யோசனைகளை ஏற்றுக் கொண்டனர்.

செயலாளர் யாவருக்கும் நன்றி தெரிவிக்க, கூட்டம் இனிது நிறைவேறியது.

கோ. மு. முத்துசாமி பிள்ளை,
தலைவர்.

கொ. நீ. சிங்காரவேலு.
செயலாளர்,

மதிப்புரை

சன்மார்க்க சங்க நூற்றாண்டு விழா மலர்.

வெளியிட்டோர்:— திருச்சிராப்பள்ளி மாவட்ட சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம். நூல் கிடைக்குமிடம்:— திரு. ந. இரா. ஊரன், சமயபுரம் (P.O.) திருச்சி மாவட்டம். விலை ரூ. 2-00.

சமரச சுத்த சன்மார்க்க சங்கம் வடலூரடிகளாரால் 1865ல் நிறுவப் பெற்றது. 1965ல் அதற்கு நூற்றாண்டு விழா நிகழ்ந்தது. அதன் நினைவாக இம் மலர் வெளிவந்துள்ளது. மருத நிலத் தலைவனுக்கு ஊரன் என்பது பெயராகும். அவ் ஊரன் மனம் வைத்தால் செழிப்பே தவிர வறுமைக்கு வழியிருக்காது. குறுகிய காலத்தேயே இத்தகைய நன்மலரை வெளிவரச் செய்த அவ்வூரனாரின் முயற்சி மிகவும் போற்றத்தக்கது. பல படங்கள், நல்ல தாள்கள், நல்ல அச்சு முதலிய எல்லா நற்பேறுகளையும் பெற்று மலர் புதுமணம் பெற்றுப் பொலிகின்றது. இம் மலர் 19 கட்டுரைகளைத் தன்னகத்தே கொண்டு மிளிர்கின்றது. இக்கட்டுரைகள் யாவும் வள்ளலார் பெருமை, வள்ளலார் சைவ சமயாச்சாரியார் அடியொற்றிப் பாடிய பெருமை, சைவ சமயாச்சாரியர்களிடத்தும் வள்ளுவர் போன்ற புலவர் பெருமக்களிடத்தும் வள்ளலாருக்கிருந்த ஈடுபாடு முதலிய பலதிறப்பட்ட செய்திகளைத் தெரிவிக்கின்றன.

வள்ளலார் திருவருட்பாவில் கூறாத துறைகளே ஒன்றும் இல்லை எனலாம். சிறப்பாக ஆருந் திருமுறை அனுபவம் பழுத்து முதிர்ந்த வாக்குகள் எனில் அது மிகையாகாது. காலநிலைக்கேற்ப அவர்கள் தொண்டு நம் தமிழகத்துக்குக் கிடைத்தது ஒரு சிறப்பே.

அவ்வள்ளலாரின் வரலாற்றுக் காலக் குறிப்புகள், சைவ வுணவு பற்றிய விளக்கம் முதலிய பல சிறந்த செய்திகள் இம்மலரில் இடம் பெற்றுள்ளன. அன்பர்கள் படித்துப் பயன்பெற வேண்டுகின்றனம். — (அம்பை)

முருகேசர் முதுநெறி வெண்பாவுரை

[விலை ரூ. 1-25. குமரன் செந்தமிழ் நூற்பதிப்புக் கழகம், 39 சபாநாயகர் வீதி, சிதம்பரம்]

திருக்குறளினுடைய கருத்தை விளக்கும் பொருட்டுப் பல வெண்பா நூல்கள் எழுந்தன. இவை பாடலின் முதல் இரு வரிகளில் ஒரு சரித்திரத்தைக் குறிப்பிட்டு, பின் வரிகளில் குறள் பாடல் ஒன்றை அப்படியே பெய்து வைத்திருக்கும். இவ்வாறு தோன்றிய நூல்களில் காலத்தால் முதலாவது தினகர வெண்பா 16ஆம் நூற்றுண்டு, பின்னர் தோன்றியவை ஒன்பது நூல் வரையில் உள்ளன. இவற்றுள் ஒன்று முருகேசர் முதுநெறிவெண்பா. இது சிதம்பரம் ஈசானியமடம் ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள் செய்த நூல். 133 அதிகாரத்திற்கும் 133 பாடல்களும், பாயிரம் இரண்டு பாடல்களும், கொண்டது. சுவாமிகள் சென்ற நூற்றுண்டின் பிற்பகுதியில் தில்லையிலும் சென்னையிலும் மிகவும் பிரசித்தமாய் விளங்கிய பெரும் புலவர், சிறந்த தமிழறிஞர்; வீர சைவ சமயத் துறவி. பல நூல்களை அச்சிட்டவர், பல நூல்களுக்கு உரையும் எழுதியவர். சிதம்பரத்தில் நடராஜப் பெருமான் துவஜ ஸ்தம்பத்துக்கு மேல்பால் உள்ள தூணிலிருக்கும் தண்டபாணியை விளித்து இவ் வெண்பா நூல் பாடினுர் என்பர். சுவாமிகள் விரிவான கல்வி கேள்வி யுடையவராகையால் அரிய புராணச் செய்திகள் பலவற்றை இந்நூலில் அமைத்துப் பாடியிருக்கிறுர்.

சுவாமிகளிடம் மாணுக்கராய் இருந்த குமார வீரையர் என்ற பண்டிதர் எழுதிய உரையோடு 1892ல் இந்நூல் வெளியாயிற்று. இப்போது இதை மீண்டும் சிதம்பரம் குமரன் செந்தமிழ் நூற்பதிப்புக் கழகத்தார் அழகாக அச்சிட்டு வெளியிட்டிருக்கிறுர்கள். அண்ணுமலைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் செ. வேங்கடராமச் செட்டியார் முன்னுரையில் நூல் நயங்களை நன்கு எடுத்துக் காட்டியுள்ளார். வரவேற்கத் தக்க பதிப்பு. —ஆசிரியர்

மாசி மாத விசேட தினங்கள்

5 (16—2—66) காரிநாயஞர் விழா
7 (18—2—66) சிவராத்திரி விழா
9 (20—2—66) கோச்செங்கட் சோழ நாயஞர் விழா
23 (6—3—66) மாசிமக விழா
25 (8—3—66) எறிபத்தநாயஞர் விழா.

சங்கம்: தமிழ் மாதப் பத்திரிகை

நந்தி நகர், பிஜித் தீவுகள் இப் பெயர் கொண்ட பத்திரிகையின் மூன்று இதழ்கள் (1965 ஆனி – புரட்டாசி) வரப் பெற்றோம் இவ்விதழ்களில் 1964 சமாஜ ஆண்டு விழாச் சைவர் மகாநாட்டுத் தமிழ் உரை, மதுரை ஆதீனத் தலைவர் ஆன்மாக்களுக்குக் கடவுள் துன்பம் அளிப்பது கூட நன்மைக்கு என்ற கட்டுரையும் காணப்படுகின்றன. சரஸ்வதி தத்துவம், பழமொழி விளக்கங்கள் முதலிய கட்டுரைகள் சிறப்பு. விவேகானந்தா கல்லூரித் திறப்பு விழா பற்றிய விரிவான செய்திகள் உள்ளன. படங்கள் பல அச்சிடப்பட்டுள்ளன. கிரவுன் 1+4 அளவில் நியூஸ்பிரிண்ட் காகிதத்தில் 12 பக்கம் உலகச் செய்திகளும் பாகிஸ்தான் படையெடுப்புச் செய்திகளும் தாங்கி வெளி வருகிறது. பத்திரிகையின் நோக்கம் பிஜீத் தீவில் வாழும் தமிழ் மக்களிடையே தெய்வ உணர்ச்சியைப் புகட்டுவதும் பல துறை உலக அறிவை அவர்களுக்கு ஊட்டுவதும் என்று தெரிகிறது. நல்ல முயற்சி; வாழ்க சங்கம்; வளர்க அதன் தொண்டுகள்.

(ஆசிரியர்)

1965ல் சமாஜத் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் விவரம் வருமாறு:—

சைவப் புலவர் தேர்வு

எண்			வகுப்பு
1.		அ. பாலசுப்பிரமணியன்	I
2.	128	சி. பொன்மணி	II
3.	134	த. அன்னலட்சுமி	,,
4.	136	சு. இரத்தினம்	,,
5.	143	V. T. செல்லதுரை (மட்டக்களப்பு)	,,
6.		க. செல்லப்பா	,,
7.	132	க. தங்கராசா	III
8.	133	க. ஜெயமணி	,,
9.	135	ஸ்ரீ அப்புதுரை	,,
10.	137	த. இராசரத்தினம்	,,
11.	139	சி. இராசேஸ்வரி	,,
12.	140	க. சிற்றம்பலம்	,,

(திரு. அ. பாலசுப்பிரமணியன் அவர்கள் முதல் வகுப்பில் வெற்றி பெற்றதால் அதற்குரிய பரிசுத் தொகையாக நம் சமாஜ அன்பர் ஒருவர் வைத்துள்ள மூலதனத்திலிருந்து வரும் வட்டித் தொகையாகிய ரூ. 50/- (ஐம்பதினையும்) பரிசாகக் கொடுத்துள்ளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்)

இளஞ்சைவப் புலவர் தேர்வு

எண்			வகுப்பு
1.	570	கை. நமசிவாயம்	I
2.	572	வை. இராமகிருஷ்ண ஐயர்	II
3.	575	வெள்ளைத்தம்பி தம்பிராசா	,,
4.		தி. கோலப்பன் செட்டியார்	,,

வெளிவந்துவிட்டது!

சைவ சித்தாந்த மகா சமாஜம் புதிதாகத் துவக்கியுள்ள முத்திங்கள் ஆங்கிலப் பத்திரிகை

"சைவ சித்தாந்தா"

ஜனவரி 1966 இதழ் சிறந்த கட்டுரைகள் கொண்டுள்ளது. வனப்பான அச்சு.

பத்திராசிரியர் : நல். முருகேச முதலியார்

ஆண்டு சந்தா ரூ. 5-00

இன்றே சந்தாதாரராகச் சேருங்கள்

★

விளம்பரம் கொடுங்கள்

தகவல்களுக்கு கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள் :

செயலர், சைவ சித்தாந்த மகா சமாஜம்,

12, கிழக்கு மாடவீதி

மயிலாப்பூர், சென்னை-4.